[29th January 1972

(9) பண்ணை முழு அளவில் நிறுவப்படும்பொழுது அதில் 750 கால்நடைகள் இருக்கும். இதுவே நாட்டில் உள்ள முர்ரா எருமைப் பண்ணைகளில் பெரியதாக இருக்கும். அறிவியல் முறை வளர்ப்புப் பண்ணையாக இது இருக்கும். அறிவியல் முறை வளர்ப்புப் பண்ணையாக இது இருக்குமேயன்றி வணிகத் தன்மை கொண்ட பண்ணையாக இருக்காது.

(10) இந்தப் பண்ணை, பாற்பண்ணை மந்தைகளை நிர்வகித்தல், தீவினப் பயிர்கள், அறிவியல் முறையில் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் ஒரு கட்டிட விளக்கப் பண்ணையாகத் திகழும். இப்பண்ணை, மற்ற நாடுகளில் இன வளர்ப்புக் காரியத்திற்காக இனவிருத்திச் சோதனை செய்யப்பட்ட முர்ரா எருமைக் கடாக்களையும் வழங்கலாம்.

APPENDIX II.

[Vide answer to Starred Question No. 60 on page 211)

தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்பு தீவிர குடும்ப நல இயக்கமொன்றை செயல்படுத்துவதற்காக 20-10-1971 முதல் 14-11-1971 முடிய பிரச்சார இயக்கமும் 15-11-1971 முதல் 10-1-1972 முடிய சேவை இயக்கமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 15,000 அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளரின் செயற்குறிப்பு ஒன்றினை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த இயக்கத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட கூடுதல் சலுகைகள் அளிக்கப்படுகின்றன :—

(1) ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உடல்நல நிலையங்களிலும் (Health Resorts) தங்கி அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொரு நபருக்கும் சிறப்பு சாப்பாட்டுச் செலவுக்காக ஒவ்வொரு நாளும் ரூ. 3.50 கொடுக்கப்படுகிறது.

நிலைமை சிக்கலாகி மேலும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டியவர்களுக்கு மேலும் நான்கு நாட்களுக்கு உணவிற்காக மேற்கண்ட விகிதத்தில் செலவு அனுமதிக்கப்படுகிறது. அவ்வாறு தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை 5 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது.

(2) அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொரு நபருக்கும் ரூ. 3 வீதம் போக்குவரத்து செலவுக்காக ரூ. 45,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

(3) அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொரு நபருக்கும் கூடுதலான ஈடுசெய்யும் நிதியை அளிப்பதற்காக ரூ. 1.50 லட்சத்திற்கு மேற்படாமல் நன்கொடை வசூலிப்பதற்காக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று தீவிர குடும்ப நலத்திட்ட இயக்கத்தை செயல்படுத்தும் பணியில் ஈடுபடும் மருத்துவ அதிகாரிகளுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன :—

1. மருத்துவ அதிகாரிகள் முழு தினப்படியை பெறுவதற்காக பயண விதிகள் தளர்த்தப்படுகின்றன.

29th January 1972]

2. ஆண் நபர் ஒருவருக்கு வாசெக்டமி சிகிச்சை செய்தால் ரூ. 3-ம் பெண் நபர் ஒருவருக்கு கருத்தடை வளையம் பொருத்துவதற்கு (IUCD Insertion) ரூ. 1-ம் மருத்துவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

3. பயிற்சி மருத்துவர் (House Surgeon) ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தினத்திற்கும் தினப்படியாக ரூ. 5 தீவிர இயக்க காலத்தில் கொடுக்கப்படுகிறது.

தீவிர குடும்பநலத் திட்ட இயக்கங்கள் நடைபெறும் மற்ற மாவட்டங்களுக்கு அனுமதிப்பதுபோல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் மற்ற செயல் குறிப்புகளான விளம்பரம் ,பிரச்சாரம், படுக்கை, தலையணை, ஆடைகள், மருந்துகள் மற்றும் "யூனிசெப்" நிறுவனத்தாரின் வண்டிகளை உபயோகித்தல் ஆகியவற்றிற்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

சாதாரணமாக வாசெக்டமி (ஆண் அறுவை) மற்றும் டியூபெக்டமி (பெண் அறுவை) அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நபர்களுக்கு ரூ. 30 வீதம் ஈடு செய்யும் தொகையாக அளிக்கப்படுகிறது.

குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்தின் கீழ் ஈடுசெய்யும் தொகையாக கொடுக்கப்படும் தொகையான ரூ. 30-க்கு மேல் பெரிய அளவில் நடக்கும் வாசெக்டமி இயக்கங்களில் நடக்கும் ஒவ்வொரு வாசெக்டமி அறுவை சிகிச்சைக்கும் ரூ. 20 கொடுப்பதென சமீபத்தில் மத்திய அரசு தீர்மானித்திருக்கிறது. அது கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியான பின்பு அளிக்கப்படும் :—

1. முகாம்களில் அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சையின் தரம் மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். மேலும் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்றின் அறுவைப் பேராசிரியரின் கீழ் அது கண்காணிக்கப்பட்டு அந்த மருத்துவம் அளிக்கப்படவேண்டும். அறுவை சிகிச்சை செய்வதற்கான முன்னெச்சரிக்கைகளிலோ முறைகளிலோ எந்த விதத்திலும் தளர்வு இருக்கக்கூடாது.

2. திட்டமிட்ட, வேகமான திறமையான மருத்துவ "தொடர் நடவடிக்கை" இருத்தல் வேண்டும்.

3. குறைந்த பட்சம் 10,000 அறுவை சிகிச்சைகளாவது இவ்வித இயக்கங்களில் நிர்ணயிக்கப்படலாம்.

மத்திய அரசின் மேலே கூறப்பட்ட தீர்மானத்தையொட்டி, மதுரை, தென்னாற்காடு சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் நவம்பர் மற்றும் டிசம்பர் 1971-ல் தீவிர குடும்ப நல இயக்கம் நடக்கவிருக்கிறது. இந்த இயக்கங்கள் கீழே குறிப்பிட்டவாறு ஒவ்வொரு மாவட்டத்திற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள அறுவை சிகிச்சை இலக்கை அடைவதற்காகவே அமைக்கப்படுகின்றன.

1. தஞ்சாவூர் மாவட்டம்	15,000 அறுவை சிகிச்சைகள்
2. தென்னாற்காடு மாவட்டம்	20,000 அறுவை சிகிச்சைகள்
3. மதுரை மாவட்டம்	12,000 அறுவை சிகிச்சைகள்.
4. சேலம் மாவட்டம்	15,000 அறுவை சிகிச்சைகள்.

இந்தவிதமான ஊக்க சலுகைகள் மற்ற மாவட்டங்களுக்கு கொடுக்க வேண்டுமா என்ற கேள்வி பரிசீலனையில் உள்ளது.